2009 ஜூலை 21]

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் பெரிய வெள்ளம் பெருகி, நீரால் சூழப்பட்டு பேரழிவுக்கு ஆளாகி மக்கள் அவதியுறுவது அரசுக்குத் தெரியும். மாவட்ட நிர்வாகம் சில முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், அந்த மக்களுக்குப் போர்க்கால அடிப்படையில் உதவி செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

(அஊ) சென்னை மெட்ரோ இரயில் திட்டம், திருவொற்றியூரிலிருந்து தொடங்குதல் மற்றும் பெரம்பூர் தொகுதி, தீ விபத்தால் பாதிக்கப்பட்டோருக்குக் கூடுதல் நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன்.

திரு. கே. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தினுடைய போக்குவரத்து நெரிசலை சமாளிப்பதற்கு மெட்ரோ இரயில் திட்டத்தை அமலாக்குவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடந்து முடிந்திருக்கிறது. மெட்ரோ இரயில் திட்டம் என்பது திருவொற்றியூரிலிருந்து தொடங்கப்படுவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்று அரசு, ஆளுநர் உரையில் அறிவித்திருந்தாலும்கூட வண்ணாரப்பேட்டையிலிருந்துதான் அந்தத் திட்டத்தைத் தொடங்குவதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, வட சென்னை மீண்டும் புறக்கணிக்கப்படுகிறதோ என்ற உணர்வு வட சென்னை மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கக்கூடிய காரணத்தால், மெட்ரோ இரயில் திட்டத்தை திருவொற்றியூரிலிருந்து தொடங்குவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மேலும், கடந்த மாதம் 17 ஆம் தேதி என்னுடைய தொகுதியில் டி. கல்யாணபுரத்தில் 187 வீடுகள் எரிந்து சாம்பலாயின. கடந்த 5 தினங்களுக்கு முன்பாக பி.எஸ். மூர்த்தி நகரில் 125–க்கும் அதிகமான குடிசைகள் எரிந்து சாம்பலாகியிருக்கின்றன. ஏற்கெனவே பல உறுப்பினர்கள் சொன்னதைப்போல பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் நிதிதான் வழங்கப்பட்டிருக்கிறது. இது எந்த வகையிலும் போதுமானதாக இருக்க முடியாது. ஆகவே, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய மக்களுக்கு கூடுதல் நிதி வழங்குவதற்கான

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம். (குறுக்கீடு) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மகேந்திரன் அவர்கள் இங்கே பேசுகிறபோது மெட்ரோ இரயில் திட்டத்தில் திருவொற்றியூரும் இணைக்கப்பட வேண்டும்; அது ஆய்வுப் பணியிலே இருப்பதாக அரசின் சார்பில் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்; உண்மைதான். அந்த ஆய்வுப் பணிகள் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன. அந்த ஆய்வுப் பணிகளின் முழுமையான விவரம் அரசுக்குக் கிடைத்ததற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சருடைய அனுமதியோடு நிச்சயமாக அதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இதைச் சொல்வதற்கு முன்னால், ஏதோ வட சென்னை புறக்கணிக்கப்படுகிறது என்று சொல்வது, தொடர்ந்து ஒரு வழக்கமாகவே, பழக்கமான ஒரு சொல்லாகவே மாறியிருக்கிறது. ஆனால், இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில், நிச்சயமாக நான் உறுதியோடு தெரிவிக்க விரும்புகிறேன், இப்போது வட சென்னைமீதுதான் அதிகமான அளவிற்கு அக்கறை எடுத்துக்கொள்ளப்பட்டு, பல்வேறு பாலங்கள், சுரங்கப் பாதைகள், மாநகராட்சியின் சார்பில் அமைக்கப்படக்கூடிய பல்வேறு பூங்காக்கள் எல்லாம் வட சென்னை பகுதிக்குத்தான் அதிகமாக வந்துகொண்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இது மாண்புமிகு உறுப்பினருக்கும் தெளிவாகத் தெரியும். இருந்தாலும் கேட்க வேண்டுமே என்பதற்காக இதைக் கேட்டிருக்கிறார். எனவே, இந்த விளக்கத்தை நான் அவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(ஈ) தீப்பெட்டித் தொழில், பொட்டாஷியம் குளோரேட் மூலப் பொருள் தட்டுப்பாடின்றிக் கிடைக்கச் செய்தல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.